CENTRE FOR POLICY ALTERNATIVES

# ‘ஒரே நாடு, ஒரே சட்டம்’ தொடர்பான ஜனாதிபதி செயலணியை இரத்துச் செய்வதற்கு மா.கொ.நி அரசாங்கத்தைக் கோருகிறது

***28 ஒக்டோபர் 2021,*** ‘ஒரே நாடு, ஒரே சட்டம்’ எனும் எண்ணக்கருவைச் செயற்படுத்துவதற்கு ஆணையளிக்கப்பட்டு அதற்கான சட்ட வரைபொன்றைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் உள்ளிட்டவற்றுக்காக, கலகொடஅத்தே ஞானசார தேரர் தலைமையில், ஜனாதிபதி செயலணியொன்று அண்மையில் நியமிக்கப்பட்டமை தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் கொண்டுள்ளது. முன்னொருபோதுமில்லாத பொருளாதாரக் கஷ்டங்கள் மற்றும் அரசாங்கக் கொள்கைகள் அம்பலமாகின்ற ஒரு சமயத்தில் இச்செயலணியின் நியமனமானது, செயலணிகளால் நிர்வகிக்கப்படுதல், மத ரீதியான சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறை மற்றும் தாக்குதல்களைத் தூண்டிவிடுவதுடன் தொடர்புபட்ட பிரிவினைவாத பௌத்த துறவிகளை முன்னிலைப்படுத்தும் ஒரு கலாச்சாரத்தைக் கட்டியெழுப்புவது உட்பட, ஒரு தொகையான கேள்விகளை எழுப்புகின்றன; இவை அனைத்தும் குற்றவிலக்களிப்பையே வலுப்படுத்துகின்றன.

குறிப்பாகவும் மற்றும் 2019 ஜனாதிபதித் தேர்தலின் போதும் பரவலாக உபயோகிக்கப்பட்ட ‘ஒரே நாடு, ஒரே சட்டம்’ என்ற சொற்றொடர், மிகவும் குறிப்பாக பெரும்பான்மை என்ற ஒரு உட்பொருளையே கொண்டுள்ளதுடன், சட்டத்தின் கீழ் சமத்துவம் அல்லது சமனான பாதுகாப்புக்கான விருப்பின் ஒரு வெளிப்படுத்தலை அது எந்த விதத்திலும் கருதவில்லை என்பதை மா.கொ.நி மேலும் கவனத்தில் கொள்கிறது. பதிலுக்கு, புராதன காலத்தில் “ஒரே சட்ட முறைமை” மூலம் இலங்கை நிர்வகிக்கப்பட்ட போது சிறுபான்மையினரையும் அது நன்மைப்படுத்தியது என்ற ஒரு தவறான பரப்புரையை முன்னிறுத்துவதற்கு, இச்சொற்றொடர் இலங்கையின் சட்ட வரலாறு மற்றும் சட்ட முறைமையினை வேண்டுமென்றே திரிபுபடுத்துவதை ஆதரிக்கிறது.

இலங்கையின் அரசியலமைப்பில் உத்தரவாதமளிக்கப்பட்ட மனித உரிமைகள் தராதரங்களை அல்லது இலங்கையின் சர்வதேசக் கடப்பாடுகளைத் திருப்தி செய்யாத, ஆள்கள் பற்றிய சட்டங்களின் அம்சங்கள் உட்பட, இலங்கை சட்ட முறைமையில் பல அம்சங்கள் இருக்கின்றதை மா.கொ.நி கவனத்தில் கொள்கிறது. இந்த மனித உரிமைக் கடப்பாடுகளுடன் ஒத்திசையும் வகையில் கொண்டு வருவதற்கான ஒரு தீவிர முயற்சி நம்பகத்தன்மை மற்றும் அவ்வாறு செயற்படுவதற்கான செயற்றிறன் கொண்ட ஆட்களால் முன்னெடுக்கப்படும் ஒரு நேர்மையான பிரதிநிதித்துவம் மற்றும் கலந்தாலோசனைச் செயன்முறையைத் தேவைப்படுத்தும். அவ்வாறான ஒரு நேர்மையான மற்றும் உள்ளிணைந்த அணுகுமுறைக்கு இந்த செயலணி நேரெதிரானது என்பதுடன் **சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக இரத்துச் செய்வதற்கு மா.கொ.நி அரசாங்கத்தைக் கோருகிறது.**

இருக்கும் நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகளை மேவும் வகையில், 2020 இலிருந்து ஸ்தாபிக்கப்பட்ட, பல தற்காலிகக் கட்டமைப்புகள் மீது அரசாங்கத்தின் தங்கியிருத்தல் தொடர்பாக மா.கொ.நி முன்னதாகக் கரிசனைகளை எழுப்பியிருந்தது. தெளிவற்ற வகையில் குறிப்பிடப்பட்ட இச்செயலணியின் ஆணை வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பாக அச்சங்களைக் கட்டமைக்கின்றதுடன், இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டச் சீர்திருத்தங்களுக்கான அதன் தாக்கங்கள் பற்றி மேலும் கவலையளிக்கும் வகையிலான கேள்விகளை எழுப்புகிறது.

Centre for Policy Alternatives (Guarantee) Limited | 6/5, Layards Road, Colombo 5, Sri Lanka
Tel: ++94112081384, +94112081385, +94112081386 | Fax: +9411 2081388 | Email: info@cpalanka.org | Web: www.cpalanka.org

மேலும், கலகொடஅத்தே ஞானசார தேரோ என்பவர், அவரைச் சுயாதீனமாகப் புலன்விசாரணை செய்வதற்கு அல்லது பொறுப்புக் கூற வைப்பதற்கு அறிந்ததான வகையில் நடவடிக்கை எடுக்கப்படாதவராக, இன ரீதியான-தேசியவாதப் பேச்சு மற்றும் குறிப்பாக முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான குரோதப் பேச்சு என்பவற்றில் அலட்டிக் கொள்ளாத ஒரு தீவிரத்தன்மை கொண்டவர் என்பதை மா.கொ.நி கவனத்தில் கொள்கிறது.

மேலும், நீதவானை மிரட்டியும் மற்றும் அரச சட்டவாதியை நிந்தித்தும் ஹோமாகம நீதிவான் நீதிமன்றத்தில் அவரது முறையற்ற நடத்தைக்காக நீதிமன்ற அவமதிப்புகாகத் தேரர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டமை, இலங்கையின் சட்டவாட்சிக்கான அவரது முழுமையான அலட்சியப்படுத்தலிற்கு ஓர் அடையாளமாகும். சட்டவாட்சிக்கான மற்றொரு அடி, 2019 இல் தேரர் ஜனாதிபதியால் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டமையாகும், இந்நகர்வு உயர் நீதிமன்றத்தில் மா.கொ.நி ஆல் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

அப்படியானதொரு நபரிற்கு ஏதேனும் இடமளிப்பது ஆட்சித்துறையின் அடிப்படைக் கண்ணியத்திற்கு ஓர் அப்பட்டமான அவமதித்தல் என்பதுடன் மக்களை மிகவும் பிளவுபடுத்தும் கொள்கை நிகழ்ச்சி நிரலின் ஒரு தெளிவான குறிக்காட்டி எனும் எங்களது நம்பிக்கையை நாங்கள் வலியுறுத்துகிறோம். இலங்கையின் சட்டச் சீர்திருத்தம் மாத்திரமன்றி, ஆட்சிமுறைமையில் எந்தவொரு வகிபாகத்தை ஆற்றுவதற்கும் அவர் முற்றிலும் பொருத்தமற்றவராவர். அதனால், இந்த தற்போதைய நகர்வு ஜனநாயக ரீதியாக எதிர்க்கப்படுதல் வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கையை உடனடியாக நிறுத்துவதற்கான இயலாமை அல்லது துணிவின்மை இலங்கை மற்றும் இலங்கையர்களுக்கு ஆழ்ந்த ஆபத்தான பின்விளைவுகளுடன், அரசாங்கத்தின் இராணுவமயப்படுத்தல் மற்றும் ஆட்சிமுறை என்பவற்றால் பின்தங்கியிருக்கும் பெரும்பான்மை எதேச்சாதிகாரம் நோக்கி இலங்கையின் சரிதலை துரிதப்படுத்த மட்டுமே செய்யும்.